பேருந்து நிலையத்தை மாற்றுதல்.

*5786—திரு. எம். சேட்டு : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், செங்கம் நகரில் உள்ள பேருந்து நிலையத்தை வாரச் சந்தை கூடும் துர்க்காப்பேட்டைக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே—

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

திரு. எம். சேட்டு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாவட்டம் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் செங்கம் நகரிலுள்ள பேருந்து நிறுத்தம் இடத்திலுள்ள வார சந்தை கூடும் துர்க்காபேட்டையிலிருந்து வேறு இடத்திற்கு மாற்றம் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ? ஆம் எனில் அது எப்போது செயல்படுத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மூலக் கேள்விக்குத் தான் பதில் அளித்தேன். எந்த செயற்குறிப்பும் தற்போது அரசினிடம் இல்லை.

திரு. எம். சேட்டு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த பஸ் ஸ்டாண்ட் குறுகிய இடத்திலே இருப்பதால், மக்கள் நலனை கருதி இப்போதாவது அதைச் செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சம்பந்தப்பட்ட பேரூராட்சியில் அதற்கான தீர்மானம் நிறைவேற்றி, முறைப்படி ப்ரோபோசலை அனுப்பினால் அதற்கான நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.